

விருதுநகர் அரசு போக்குவரத்து கழக மண்டல அலுவலகத்தில் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் முன்னிலையில் , வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் புதிதாக அமைக்கப்பட்டுள்ள குளிரூட்டப்பட்ட பணியாளர்கள் ஓய்வு அறையினை திறந்து வைத்து , பயிற்சி மையத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள நவீன கணினி ஓட்டுநர் திறன் மேம்பாட்டு சாதனத்தை துவக்கி வைத்தார்கள் .

### நாகையில் 957பயனாளிகளுக்கு

# ரூ.4.24 கோடியில் இலவச வீட்டு மனைப் பட்டா!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்! என்.கௌதமன், உ.மதிவாணன் பங்கேற்பு!

நாகை, மார்ச் 18-

நாகை மாவட்டம் நாகை ஒரத்தூரில் உள்ள அரசு மருத்தவக் கல்லூரி மருத்துவமனையில் 1,081 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா மற்றும் நலத்திட்ட உதவி கள் வழங்கும் விழா நடை பெற்றது.

விழாவிற்கு நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜ ா னி ட ா ம் வ ர் கீ ஸ் தலைமை தாங்கினார்.

நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலை வர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதி வாணன் ஆகியோர் முன் னிலை வகித்தனர். விழா வில் சட்டத்துறை மற்றும் நீதிமன்றங்கள், சிறைச் சாலை, ஊழல் தடுப்புச் சாலை, ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகு பதி கலந்து கொண்டு 957 பயனாளிகளுக்கு ரூபாய் 4 கோடியே 24 லட்சத்து 72 ஆயிரம் மதிப்பிலான இல வச வீட்டு மனை பட்டா மற்றும் மாவட்ட பிறப்ப டுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை சார்பில் சிறுபான்மையினர் சமுதாயத்தை சேர்ந்த 28 பயனாளிகளுக்கு ரூ.2.03 லட்சம் மதிப்பிலான மீன் மோட்டார் பொறுத்திய இலவச தையல் இயந்திரங் களையும், சமூக நலத்துறை சார்பில் 91 பயனாளகளுக்கு ரூ.6.70 லட்சம் மதிப்பிலான இலவச தையல் இயந்திரங் களையும், தாட்கோ துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ. 31.47 லட்சம் மதிப்பி லான கடன்களுக்கான ஆணை என 1,801 பயனா ளிகளுக்கு ரூ. 5.04 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசி னார்.

அவர் பேசியது வருமாறு:-

குடிசைகள் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்ற லட்சிய கனவோடு தமிழ் நாடு முதலமைச்சர் அவர் கள் குடிசை இல்லா தமிழ கத்தை உருவாக்க முதல் கட்டமாக முத்தமிழ் அறி ஞர் கலைஞர்அவர்களின் கனவை நிறைவேற்றும் வகையில் திட்டத்தை தொடங்கி வைத்து அதற்கு அடிப்படைப்படையாக அந்த இல்லத்தை கட்டுவ தற்கு பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டா அவசி யம், வீடு அவசியம் என உணர்ந்து கலைஞர் நூற் றாண்டு விழாவை முன் னிட்டு

விலையில்லா வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும் என்று முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள் ளார்கள். விலையில்லா வீட்டு மனை பட்டாவை தவிர அந்த இடத்திற்கு விலை மதிப்புள்ளது. அந்த அளவிற்கு விலை மதிப்புள் ளதாக அந்த இடத்தை விலை மதிப்புள்ளதாக பய னாளிகளக்கு தமிழ்நாடு முதலமைச்சர் தருகிறார்கள் என்பதை தமிழ்நாட்டு மக் கள் தெரிந்து கொள்ள வேண்டும். 957 நபர்களுக்கு தரப்படுகின்ற வீட்டு மனை பட்டாவின் மதிப்பு ரூ. 4 கோடியே 24 லட்சத்து 27 ஆயிரம். பல கோடி மதிப்பி லான இடத்தைதான் தருகி றோம். அதில் நீங்கள் வீட்டை கட்டிக்கொண்டு கலைஞரின் கனவு இல் லத்தை நிறைவேற்ற வேண் டும் என்பதுதான் கழகத்த லைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆசை.

நம்முடைய முதல்வர் அவர்கள் 2030க்குள் 8 லட் சம் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகள் கட்டி முடிக்க வேண்டும். தமிழ கத்திலே குடிசைகள் இல் லாத மாநிலமாக தமிழ் நாட்டை உருவாக்க கலைஞரின் கனவு இல்ல திட்டத்தில் பயன்படுத்த வேண்டும் என்பது முதல மைச்சரின் விருப்பம் ஆகும். இதில் முன்னுரிமை என்பது குடிசை வீட்டில் வாழ்ந்து வருபவர்களுக்கு முதல் உரிமை வழங்கப்பட்டு வீடு கள் கட்டி தரப்படும். ஏன் என்றால் அவர்களால் தான் குடிசை வீடுகள் இல்லாத தமிழகத்தை உருவாக்க முடியும். அதற்கு அரசின் சார்பில் ரூ. 3.5 லட்சத்தை தருகின்ற முதலமைச்சராக நம்முடைய முதமைச்சர் இருக்கிறார்கள். இந்தியாவி லேயே வேறு எந்த மாநிலத் திலும் கிடையாது.

பாரத பிரதமர் வீட்டு வசதி திட்டம் என்று சொன் னாலும் கூட அதிக பணம் கொடுப்பது மாநில அரசு தான் என்பது நாடு அறிந்த உண்மை. ஆனால் அந்த திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு திட்டம் என்ற பெயர் வைக்க வில்லை. பாரதபிர தமர் வீட்டு வசதி திட்டம் என்றுதான் பெயர் வைத் துள்ளோம். ஒன்றிய அர சின் திட்டங்களுக்கு எல் லாம் பெயரை மாற்று வைக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதற்கு இதுவே உதாரணம். குறை வான நிதியை ஒன்றிய அரசு கொடுக்கிறது. அதிக நிதியை தமிழ்நாடு அரசு கொடுக்கி றது. ஆனால் நாங்கள் உங் கள் திட்டம் என்று தான் சொல்கிறோம். மாநில அர சின் திட்டம் கலைஞர் கனவு இல்லம் என்ற திட் டம். ஆனால் நாங்கள் பார தபிரதமர் வீட்டு வசதி திட் டத்திற்கு கலைஞர் கனவு இல்லம் திட்டம் என்ற நாங் கள் அழைப்பதில்லை. எங் களுக்குள்ள உரிமையை தான் எடுத்துக் கொள்கி றோம் அடுத்தவர்கள் உரி மையில் நாங்கள் கை வைக் கும் பழக்கம் திராவிட மாடல் ஆட்சிக்கு கிடை யாது. திராவிட மாடல் முதல்வருக்கு கிடையாது என்பதை தெரிவித்து கொள்கிறோம். திராவிட மாடல் கொள்கை என்பது எல்லோருக்கும் எல்லாம் என்கிறது தான் திராவிட மாடல்.

எல்லோருக்கும் எல்லாம் பெற்று தரும் உன்னத நோக்கோடு இன்று இந்தி யாவை நோக்கி தமிழகத் தில் இருந்து பார்த்து கொண்டு இருக்கிறோம். இந்தியாவில் எல்லா மக்க ளுக்கும் அனைத்து வசதிக ளையும் சலுகைகளையும் பெற வேண்டும். எல்லோ ரும் நல்ல வாழ்க்கை வாழ வேண்டும் என்பது தான் தமிழக முதலமைச்சரின் நோக்கமாகும், செயலாள ரும், சிந்தனையாலும் நிறை வேற்ற முழு முயற்சி எடுத் துக் கொண்டு எல்லோருக் கும் எல்லாம் கிடைக்கும் என்பதை தெரிவித்து கொள் கிறோம். நாகை மாவட் டத்தை பொறுத்தவரை இது மூன்றாவது நிகழ்ச்சி முதல் நிகழ்ச்சியிலேயே 1,100 பேருக்கு விலை யில்லா விட்டு மனை பட்டா வழங்கப்பட் டுள்ளது.

மயிலாதுறை மாவட்டத் தில் நடைபெற்ற நிகழ்ச்சி யில் 600 பேருக்கு விலை யில்லா வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டது. இப் பாது 956 பேருக்கு விலை யில்லா வீட்டு மனை பட்டா என நாகை மாவட் டத்தில் மொத்தம் 2,657பேருக்கு விலையில்லா வீட்டு மனை பட்டா வழங் கப்பட்டுள்ளது. இது கலை ஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வழங்கப்பட் டுள்ளது. நாகை மாவட்டத் தில் வீட்டு மனை பட்டா இல்லாதவர்களுக்கு அதிக அளவில் வீட்டு மனை பட்ட வழங்கப்பட்டள் ளது. விட்டுமனை பட்ட அதிக அளவில் வழங்கப்பட் டுள்ள அரசு நமது திராவிட மாடல் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசுதான். அந்த அளவிற்கு ஏழை, எளியவர்களை எண்ணி பார்த்து, சிந்தித்து பார்த்து செயல்படுகிற முத லமைச்சர் கோட்டையில் இருக்கின்ற காரணத்தால் தான் ஓலை குடிசையில் வாழ்கின்ற ஏழை மக்க ளுக்கு வழங்க வாய்ப்பு திராவிட மாடல் அரசுக்கு கிடைத்திருகிறது.

மக்களின் வாழ்வாதா ரத்தை உயர்துவது தான் திராவிட மாடல் அரசின் நோக்கம். ஏழைகள் மற்ற வர்களுக்கு இணையான வாழ்க்கை வாழ வேண்டும் என்பது தான் நம்முடைய நோக்கம் ஆகும். இந்த திட் டத்திற்கு நாகை, வேதா ரண்யம், கீழ்வேளூர் தொகு தியில் தனியாரிடம் அதாவது மூன்றாவது தரப் பிடம் இருந்து இடம் விலை கொடுதது வாங்கி வழங் கிட அதற்கு நிதி ஒதுக்கீடு ரூ.51 லட்சம் அரசானை வழஙகப்பட்டுள்ளது. மூன் றாவது நபர்களிடம் இருந்து இடங்களை அரசு விலை கொடுத்து வாங்கி அதை விலையில்லா வீட்டு மனை பட்டாவாக வழங்குவது நாகை மாவட்டத்தில் தான் முதன் முதலாக தொடங்கப் பட்டுள்ளது. இதனால் வீட்டு மனை இல்லாத எழை எளிய மக்கள் விட்டு மனை பெறவும், பேரிடர் காலத்தில் பாதுகாப்பான குடியிருப்பை பெற்று தர வும் இந்த திட்டம் உதவும் . யார் யாருக்கெல்லாம் சொந்த இடம் இல்லையே அவர்களுக்கு விட்டு மனை வழங்குவது இந்த அரசின் தலையாய பணி, கடன், கடமையாகும். இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேசி னார்.

விழாவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.ராஜேந்திரன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், மாவட் டக் கழக துணைச் செயலா ளர் ஆரூர்மணிவண்ணன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், நாகை நக ரக் கழகச் செயலாளர் இரா.மராமுத்து, ஒன்றியக் கழகச் செயாளர்கள் மகா. குமார், உதயம் வே.முருகை யன், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் சத்திய மூர்த்தி, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் குலோத்துங்கன், ஒன்றிய துணைச் செயலாளர் திரு நாவுக்கரசு, நாகை நகரக் கழக துணைச் செலயாளர் வெற்றிலைகடைசிவா, மாவட்ட வருவாய் அலுவ லர் பேபி, ஊரட்சி முகமை கூடுதல் ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், சமூக பாதுகாப்பு திட்ட மாவட்ட தனித் துணை ஆட்சியர் கார்திகே யன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு ஊராட்சிகளில் ரூபாய் 2 கோடியே 50 லட்சம் மதிப்பில் புதிய அரசு பள்ளி வகுப்பறை கட்டிடம் மற்றும் புதிய அங்கன்வாடி கட்டிடம் சமையல் கூட கட்டிடங்களை உதயசூரியன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், சங்கராபுரம் ஒன்றிய குழு பெருந்தலைவர் திலகவதி நாகராஜன், தெற்கு ஒன்றிய செயலாளர் நா.ஆறுமுகம்,ஒன்றிய கவுன்சிலர்கள் சாந்தி கணேசன் ரீனா சரவணன், மல்லாபுரம் கிளைக் கழக செயலாளர் எம்.பச்சையா ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் மாவட்ட ஒன்றிய கிளைக்கழக திமுக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மதுரை கிழக்கு மேலூரில்

# ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர் சு.வெங்கடேசன் அறிமுகக் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, மார்ச் 18-

கழகத் தலைவர் முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர்க ளின் அறிவிப்புக்கு இணங்க தமிழ்நாட்டில் நாற்பதும் நமதே நாடும் நமதே என் பதை உறுதிப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற தேர்தலில் பணியாற்ற வேண்டும், இந்தியா கூட் டணி சார்பில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக மதுரை நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி வேட்பாளராக சு.வெங்கடேசன் போட்டி யிட உள்ளார். அதனை முன்னிட்டு மதுரை நாடா ளுமன்ற தொகுதிக்குட் பட்ட மதுரை கிழக்கு மற் றும் மேலூர் தொகுதியில் வேட்பாளர் அறிமுக கூட் டம் வரும் 20 மற்றும் 21 ஆம் தேதி நடைபெற உள் ளதாக மதுரை வடக்கு மாவட்ட செயலாளரும் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் தெரி வித்துள்ளார், அதன் விபரம்

தமிழ்நாட்டில் வரும் நாடாளுமன்ற தேர்தல் ஏப் ரல் 19 ஆம் தேதி நடைபெற உள்ளது. இத்தேர்தலில் கழ கத் தலைவர், மக்கள் போற் றும் முதல்வர் மு.க.ஸ்டா லின் அவர்களின் ஆதரவு பெற்ற இந்தியா கூட்டணி கம்யூனிஸ்ட் கட்சி வேட்பா ளர் சு.வெங்கடேசனை அதிக வாக்குகள் வித்தியாசத் தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். என்ற நோக் கோடு வேட்பாளர் அறிமுக கூட்டம் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

அதன்படி மதுரை நாடா ளுமன்றத்திற்கு உட்பட்ட மதுரை கிழக்கு தொகுதியில் வேட்பாளர் அறிமுக கூட் டம் வரும் 20.03.2024 புதன் கிழமை மாலை 4.30 மணி அளவில் ஆலத்தூர் பி.ஆர்.



திருமண மண்டபத்திலும், மதுரை நாடாளுமன்றத்துக் குட்பட்ட மேலூர் தொகுதி யில் வேட்பாளர் அறிமுக கூட்டம் 21.03.2024 மாலை 4:30 மணி அளவில் மேலூர் மூவேந்தர் பண்பாட்டு கழக திருமண மண்டபத்தி லும் வெகு சிறப்பாக நடை பெற உள்ளது.

எனவே இவ்விரு கூட் டத்திலும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர் கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர் கள்,துணை அமைப்பாளர்கள், கிளை செயலாளர்கள், நிர் வாகிகள், உள்ளாட்சி பிரதி நிதிகள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள், கழகத்தி னர், இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் என அனைவரும் தவறாது கலந்து கொண்டு நாடாளுமன்ற தேர்தல் பணியை எழுச்சியு டன் செயலாற்ற வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாவட்ட செயலாளர், வணி கவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கழகத் தினருக்கு தமது அறிக்கை யின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### மு.ஞானவேலன், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், பி.எம்.ஸ்ரீதர் பங்கேற்பு!

# செம்பனார்கோயில் ஒன்றியத்தில் புதிய கட்டிடங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

மயிலாடுதுறை,மார்ச் 18-

மயிலாடுதுறை மாவட் டம் செம்பனர்கோயில் ஒன்றியத்தில் மடப்புரம், நெடுவாசல், கூடலூர் ஆகிய இடங்களில் புதிதாக கட்டடப்பட்ட ஊராட்சி செயலக கட்டிடங்கள், மின் மாற்றிகள் திறப்பு விழா மற் றும் ரூ.2.25 மதிப்பில் தானி யக்கிடங்கு மற்றும் வீர சோழன் ஆற்றின் குறுக்கே திருவிளையாட்டத்தில் பாலம் கட்டும் பணி அடிக் கல் நாட்டுவிழா நடைபெற் றது.

விழாவில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலா ளரும்,பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு மாமாக்குடியில் ரூ. 50 லட்சம் செலவில் விவசாய தானியக் கிடங் குக்கு அடிக்கால் நாட்டி யும், ரூ. 1.42 கோடி மதிப் பீட்டில் மடப்புரம் ஊராட்சி மன்ற செயலக கட்டிடம், ரூ.1.42கோடி மதிப்பில் கட்டடப்பட்ட குரும்பூர் ஊராட்சியில் ஊராட்சி மன்ற செயலக கட்டிடம், நெடுவாசல் ஊராட்சியில் ஊராட்சி ரூ. 1.39 லட்சம் மமதிப்பில் கட் டப் பட்ட ஊராட்சி செய லக கட்டிடம், கூடலூர் ஊராட்சியில் ரூ.1.42 கோடி யில் கட்டடப்பட்ட ஊராட்சி செயலக கட்டி டம் ஆகியவற்றை திறந்து வைத்தும், திருவிளையாட் டம் வீர சோழனாற்றில் குறுக்கே பாலம் கட்டி தந் தால் பொறையார்மங்கை நல்லூர் சாலையில் இருந்து குரும்பங்குடி கிராமத்திற்கு 3 கிலோ மீட்டர் சுற்றி வரும் அளவு குறையும் என பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து ரூ 1.75 கோடி மதிப்பில் புதிய பாலம் கட்ட பூமி பூஜை செய்து கட்டுமான பணியை தொடங்கி வைத்தும், திரு விளையாட்டத்தில் புதிதாக இரண்டு மின் மாற்றுகள் அமைக்கப்பட்டுள்ளதை இயக்கி வைத்தும், விளா கம் அரசு பள்ளி கட்டி டத்தை திறந்து வைத்தும், எரவாஞ்சேரி அரசு பள்ளி கட்டிடத்தை திறந்து வைத் தும், திருக்களாச்சேரி ஹமி தியா மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவி களுக்கு விலையில்லா சைக்கில்களை வழங்கியும் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட் டக் கழக துணைச் செயலா ளர் மு.ஞானவேலன், ஒன் றியக் கழகச் செயலாளர்கள் செம்பனார்கோயில் தெற்கு எம்.அப்துல்மாலிக், செம்ப னார்கோயில் வடக்கு பி.எம்.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப் பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன் றியக் குழு தலைவர் தலை வர் நந்தினிஸ்ரீதர், ஒன்றியக் குழு துணைத்தலைவர் பாஸ்கர், மாவட்ட பிரதி நதிகள் தென்னரசன், ஈச்சங் குடி இளங்கோவன், ஜி.ஆ. பிரபாகர், சிவக்குமார், ஒன் றிய துணைச் செலயாளர் கள் அன்பழகன், இளங் கோவன், பொருளாளர் சரவணன், மாவட்ட விவ சாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் திருக்கடையூர்செந்தில், ஒன் றிய குழு உறுப்பினர் மடப் புரம் கண்ணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் கோபி, அன்பழகன் மற்றும் ஒன் றிய, கிளை கழக நிர்வாகி கள், உள்ளாட்சி பிரதிநிதி கள் கலந்து கொண்டனர்.

# அரியலூர் - திருச்சி இடைநில்லா பேருந்து சேவை!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர், மார்ச் 18-

அரியலூர் மாவட்டம், அரியலூர் அண்ணாசிலை அருகில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட், திருச்சி மண்ட லம் சார்பில் அரியலூர் திருச்சி (11) இடைநில்லா பேருந்து சேவையை தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவ சங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, முன்னி லையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்களின் போக்குவ ரத்துத் தேவைகளை நிறை வேற்றும் வகையில் பல் வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகை யில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பொது மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப நகரங் கள் முதல் கிராமங்கள் வரை பேருந்து வசதி ஏற்ப டுத்தித் தரப்பட்டு வருகி றது. அதன் அடிப்படையில் இன்றைய தினம் பொதுமக் களின் கோரிக்கைக்கு ஏற்ப அரியலூர் திருச்சி (11) இடைநில்லா பேருந்தினை தமிழ்நாடு அரசு போக்குவ ரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடிய சைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்ப)லிட் கோட்ட மேலாளர் (பெரம்பலூர்) ஆர்.ராமநாதன், அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், வட்டாட்சி யர் அரியலூர் ஆனந்தவேல், மாவட்ட துணை செயலா ளர் சி.சந்திரசேகரன், ஒன் றிய கழக செயலாளர்கள் கோ.அறிவழகன், மா.அன்ப ழகன், நகரகழக செயலாளர் இரா.முருகேசன், பொதுக் குழு உறுப்பினர் இரா. பாலு, மாவட்ட இளைஞ ரணி அமைப்பாளர் கே. சி.லூயிகதிரவன், மாவட்ட பொறியாளர் அணி அமைப் பாளர் கே.சி.லூயிகதிரவன், முன்னாள் நகர்மன்ற தலை வர் விஜயலட்சுமி செல்வ ராஜ்,தொமுச செயலாளர் பி.வி.அன்பழகன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பா ளர் கருப்புசாமி, தொமுச பழனிசாமி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் அருண் ராஜா, வழக்கறிஞர்கள் இராஜா,பாலா, நகர நிர்வா கிகள் மாலா தமிழரசன், இராஜேந்திரன், குணா, மணிவண்ணன், உத்திரா பதி, குமார்,காந்திதமதி சுப் ரமணியன், ஒன்றிய மகளிர் அணி கனிமொழி,

தமிழ்நாடு அரசு போக்கு வரத்து கழக ஊழியர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிபிரதிநிதிகள்மற்றும் அரசு அலுவலர்கள்,மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகி கள், கழக தோழர்கள் உள் ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை மாநகர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி அறிவிப்பு!



மதுரை மாநகர் மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் இன்று (18.03. 2024-திங்கட்கிழமை) மாலை 5 மணி அளவில் பசுமலை கோபால் சாமி திருமண மண்டபத்தில் அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில் நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, வட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்** :

நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமாக

மதுரை நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் தோழர் சு.வெங்கடேசன் அறிமுகக் கூட்டம்

**கோ.தளபதி எம்.எல்.ஏ.**
செயலாளர்,
மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, பனமலைப்பேட்டை ஊராட்சியில் புதிய அங்கன்வாடி கட்டிடத்தை விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றிய குழு தலைவர் கலைசெல்வி , ஒன்றிய செயலாளர்கள் முருகன், ஆர். பி.முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நரசிம்மன், சீனுவாசன், குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர் கவிதா, மாவட்ட கவுன்சிலர் சிவக்குமார், ஒன்றிய குழு துணை தலைவர் வீரராகவன், ஒன்றிய கவுன்சிலர் பாரதி சசிகுமார்,ஊராட்சி மன்ற தலைவர் கல்யாணசுந்தரம் ராமச்சந்திரன், துணை தலைவர், ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.